**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 184/2011 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | செல்வராஜ் |
| Husband Name / Father's Name | மூக்கையா |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of October 2019.

நான் தற்போது சென்னை பெருநகர காவல் பூக்கடை மதுவிலக்கு அமல்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் ஆண்டு நான்குநேரி வட்ட ஆய்வாளராக பணியாற்றியபோது மூன்றடைப்பு காவல்நிலைய குற்ற எண்.141/2010 இதச பிரிவு 379 மற்றும் 4(1), (2) r/w Sec.21 (Mines and Mineral Development and Regulation Act)-ன்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நாராயணன் என்பவர் பதிவு செய்த வழக்கின் விசாரணை நகலை நான் பெற்று கொண்டு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர்கள், நாராயணன், முகமது இக்பால், மு.கா.மணி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அதன்பிறகு சம்பவ இடமான பூலம் விலக்கு ரோட்டில் வைத்து சாட்சிகள் ராஜகோபால், இசக்கிபாண்டியன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். குற்றம்சாட்டப்பட்டவர்களான முருகன், மணிகண்டன், பாண்டி ஆகிய மூவரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முன்ஜாமின் பெற்று பிணையில் சென்றுவிட்டார்கள். அதன்பிறகு 20.02.2011 அன்று நான் பணிமாறுதல் ஆகி சென்னை சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் திரு.விஜயகுமார் வசம் ஒப்படைத்தேன். வழக்கு சம்பந்தமாக அவர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லும் மணல் சிங்கிகுளம்

ஆற்றிலிருந்து தான் திருடினார்கள் என்று எனது விசாரணையில் யார் சொல்லி தெரியவந்தது என்றால் சாட்சிகள் ராஜகோபால் மற்றும் இசக்கிபாண்டியன் சொல்லி தெரியவந்தது. அந்த மணல் அரசு அனுமதி இல்லாமல் திருடப்பட்ட மணல் என்பதை யாரை விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் யாரையும் விசாரிக்கவில்லை. அந்த மணல் லாரியில் எந்த உபகரணங்களை வைத்து அள்ளி வந்தார்கள் என்ற விபரம் துலங்காது என்றால் சரிதான். லாரியை சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு யார் மூலம் எப்படி கொண்டு வந்தார்கள் என்பது எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. இவ்வழக்கின் அத்தாட்சி மற்றும் முதல் தகவல் அறிக்கையை தயார் செய்த நபர்கள் வேறு வேறு நபர்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்டதாக சொல்லும் மணலின் மதிப்பீட்டு சான்றிதழ் யாரிடமும் வாங்கவில்லை என்றால் சரிதான். அந்த மணலை நீதிமன்றத்திலும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சாட்சிகளை விசாரணை செய்ததாக சொல்வது உண்மையல்ல என்று சொன்னாலும், புள்ளிவிபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.